# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,102 —1964 ජූලි 10 වැනි සිකුරාදා—1964.7.10**

14,102 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 191 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 197 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | 197 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### தபாற் தந்திப் பகுதி

கீழ்க்குறித்த பாவனையற்ற தபால் வான்களில் ஒன்றையோ பலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மொறிஸ் ஜே. தபால் வான் | சீவை | 7991 |
| 2. | " " | சீவை | 8114 |
| 3. | ஆஸ்ரின் ஏ 40 தபால் வான் | சீஎன் | 6026 |

கொழும்பு, 10., மக்கலம் வீதி மோட்டார் தபால் போக்குவரத்துப் பிரிவுப் பரிசோதகருடன் (தெலிபோன் இலக்கம் 4192) ஒழுங்கு செய்து இவ்வான்களைப் பார்வையிடலாம்.

2. தபாற் தந்தித் தலைமை அதிபதிக்கு விண்ணப்பம் செய்து பெற்ற பத்திரங்களில் மட்டுமே கேள்விப்பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். இப்பத்திரத்திலல்லாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. 1964 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 5 ந் திகதி பி.ப. 4.00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. பத்திரங்கள் வழங்கப்படுவதற்குமுன், தபாற் கந்தோரொன்றில் கட்டுப்பணமாக ரூபா 100/- கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் எழுத்துமூலம் தபாற் கந்தோர்த் தலைமை அதிபதியிடமிருந்தோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியிடமிருந்தோ கிடைத்து 14 நாட்களுக்குள் தபாற் கந்தோரொன்றில் கேள்விப்பத்திரத்தின் முழுப் பெறுமதியையும் கட்டுவதற்குத் தவறினால் அல்லது மறுத்தால் கட்டுப் பணத்தை அரசாங்கத்துக்கு இழக்க நேரிடும். ஏனைய எல்லாக் கட்டுப் பணங்களும் விற்பனவு முடிந்தவுடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

5. "பாவனையற்ற தபால் வான்களை (பிரதம தபாற் கந்தோர், தபாற் போக்குவரத்துச் சேவை) வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" என இடதுமேல் மூலையில் குறிப்பிட்ட உறைகளில் உள்ளடக்கப்பட்டு, கேள்விப் பத்திரங்கள் தபாற் கந்தோர்த் தலைமை அதிபதிக்கு 1964 ம் ஆண்டு ஆகஸ்து 6 ந் திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். அல்லது சீலிடப்பட்ட உறைகளில் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பதாரரால் அல்லது அவரது பிரதிநிதியால் கொழும்பு பிரதம தபாற் கந்தோர் தபால் அத்தியட்சரிடம் கையளிக்கப்பட்டு, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதம தபாற் கந்தோர், தபாற் தலைமை அதிபதியின் காரியாலய அறையில் 1964 ம் ஆண்டு ஆகஸ்து 6 ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் விருப்பப்படின் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அவர் வாங்கும் வாகனங்களை அகற்றிச் செல்வதற்காக ஏற்ற ஒழுங்குகளைத் தானே செய்துகொள்ள வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களில் எதையாவது அல்லது எல்லாவற்றையுமாவது ஒருவித கேள்விக்கிடமின்றி நிராகரிக்க அரசாங்கத்திற்குத் தன் உரிமையுண்டு.

ஆர். எல். அர்னோல்டா,
பதில் தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1964 ம் ஆண்டு ஜூலை மீ 6 ந் உ.

7-518—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 22 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 24 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 18 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னாட் த சில்வா,
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மீ 10 ந் உ.*

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை—தென் கரிமேட்டுத் தேனீர்ச்சாலே—கொச்சிக்கடை

மேற்படி தேனீர்ச்சாலேயைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினுல் ஏற்றுக்கொள்ளப்படும். இக் குத்தகை, துறைமுக அதிகாரியினுல் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கானதாகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையுடன் ரூபா 25 கட்டுப் பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்து கொடுக்கப்படும்.

7-541—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

## நீர்ப்பாசன இலாகா

நீர்ப்பாசன இலாகா மாத்தளை வட்டாரத்தில் மாத்தளை உபபகுதிக்குச் சேர்ந்த வேவல வெவ புனர் நிர்மாண வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் காணி, நீர்ப்பாசன அமைச்சின் கேள்விப் பத்திர சபைத் தலைவரால் 1964 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிவரை கொழும்பு அரசாங்க காரியாலயக் கட்டிடத்தில் 355 ம் இலக்கம் கொண்ட அறையில் ஏற்றுக் கொள்ளப் படும்.

நீர்ப்பாசன இலாகாவில் 100,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங் கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். இரண்டு கேள்விப் பத்திரங்களில் விண்ணப் பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கொழும்பில் புலோர்ஸ் பாதையிலுள்ள நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்புக்கு வெளியே ஏதாவது ஒரு கச்சேரியில் ரூபா 250/- கேள்விக் கட்டணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டை நீர்ப்பாசனப் பொறி யியலாளருக்குக் காட்டவேண்டும். இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கண்டியிலுள்ள மத்திய பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1964 ம் ௵ ஜூலை ௴ 1 ந உ.

7-454—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### உருக்குத் துளைகருவிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

உருக்குத் துளைகருவிகள் வழங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விகள் த. பெ. இல. 1138, கொழும்பு, நீர்ப்பாசன அதிபரால் 1964 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தக் கேள்விகள் இரு பிரதிகளில் இருத்தல் வேண்டும், ஒப்பந்தக் கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களை கொழும்பு 7, புல்லர் வீதி, நீர்ப் பாசன அதிபர் அலுவலகத்தில் 1964 ம் ஆண்டு, ஜூலை மாதம் 31 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். வெற்றுப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் கேள்விக் கட்டணமாக கொழும்பு 7, புல்லர் வீதி, நீர்ப்பாசன அதிபர் அலுவலகத் தில் அல்லது ஒர் கச்சேரியில் ரூபா 25 செலுத்திப் பற்றுச் சீட்டு சமர்ப் பிக்க வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை கொழும்பு 7, புல்லர் வீதி, நீர்ப்பாசன அதிபர் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
த. பெ. இல. 1138, கொழும்பு,
1964 ம் ௵ ஜூலை ௴ 4 ந உ.

7-539—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, நாராகேன்பிட்டி கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணிவரை வெரகெரை மத்திய வேலைத்தலங்களில், (1) டி. எஸ். ஓ. (பிரதி வினியோக உத்தியோகத்தர்), ஆர். ஐ. ஓ. (ஏற்கும் கொள்ளும் உத்தியோகத்தர்) ஆகியோருக்கான காரியாலயம் (கட்டிட இலக்கம் 74) ; (2)–பாரமான பகுதிகள் பண்டசாலைக்கான இணைப்புக் கட்டிடம் (இலக்கம் 15 பி) ஆகியவற்றை அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்முகவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதிப் பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) விண்ணப்பிக்கவும்.

ரூ. 50,000/ க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட அரசாங்க, இ. போ. ச. கொந்தராத்துக்காரர்களே கேள்வி யிடத்தகவுடையவர்கள். அவர்களுடைய சான்றேுலைகள் பிரதிப் பிரதம பொறியியலாளரின் (சிவில்) பரிசோதனைக்குக் காட்டப்பட்டு, அவை அங்கீகரிக்கப்பட்டால், கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐக் கட்டவேண்டும்.

கட்டுப்பணம் பற்றுச்சீட்டைக் காட்டுவதின் பேரில் பிரதிப் பிரதம பொறியியலாளர் (சிவில்) 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திரங்களை வழங்குவார். இவரிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங் களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி, கொழும்பு 5,
1964 ம் ௵ ஜூன் ௴ 29 ந உ.

7-481/1—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு—5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்கு வரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் திகதி மு. ப. 10 மணிவரை, நித்தம்புவை 2 ம் தர டிப்போவில் கட்டிடங்கள் அமைப்பதற்காக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு, பொரலஸ்கமுவ, வெரகெரை யிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம பொறியி யலாளருக்கு (சிவில்) விண்ணப்பிக்கவும்.

ரூபா 1,00,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக் குப் பதிவுசெய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களும் இ. போ. ச. கொந்தராத்துக்காரர்களுமே கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க தகவுடை யவராவர். அவர்களுடைய சான்றேுலைகள் பிரதிப் பிரதம பொறியியலாள ருக்கு (சிவில்) பரிசோதனைக்குக் காட்டப்படவேண்டும். அவை அங்கீகரிக் கப்பட்டால், கொழும்–5 கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 200 ஐக் கட்ட வேண்டும். கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதின் பேரில் பிரதிப் பிரதம பொறியியலாளர் (சிவில்) 1964 ம் ஆண்டு யூலை மாதம் 25 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத் திரங்களை வழங்குவார். இவரிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப் பத்திரங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

200 கில வீதி, கொழும்பு 5,
1964 ம் ௵ ஜூன் ௴ 29 ந் உ.

7-481/2—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பால் மாவும், சீனியும் விநியோகித்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1964 ம் ஆண்டு அக்டோபர் 1 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 30 ந் திகதி முடிய உள்ள காலம் வரைக்கும், கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் பொறுப்புள்ள அதிகாரிகளின் காரியாலயங்கள் களஞ்சியத் திடுகைகளின் ஊடாக புகையிரத நிலையங்களிலிருந்து பால் மாவும், ஐக்கிய பண்டகசாலைகளிலிருந்து சீனியும், பால் ஊட்டப்படும் நிலையங்கட்கு விநியோகிப்பதற்கும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து பதுளைப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமதியான வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(2) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்கட்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடியுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள விரும்பும் சுகாதார அத்தியட்சகர் அவர்களுக்கோ அறிவிக்கவேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிருபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 3 ம் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர் பதுளை என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் எழுதப்பட்டிருக்கவேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக்கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குட்போடலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையிற்கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக்காண்பிக்கப்படும். என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் எந்த ஒரு கேள்விக்காரரும் எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அநுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் கூறியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையிலும் குறிப்பிட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணை வைப்புப்பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப்பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப்படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் பதுளைப்பகுதிச் சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம், பதுளை,
1964 ம் ஆண்டு ஜூலை மீ 3 ந் உ.

மு. கனகரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

### மேற்கூறப்பட்டுள்ள அட்டவணை

| சேவை | பிரிவு | உத்தேசத் தொகை பால் மாவு அ. | கு. | ரு. | சீனி அ. | கு. | ரு. | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. பதுளைப்பாடசாலை வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கும் அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் பதுளை புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும் மைலகள் தென்னை ஐக்கிய பண்டகசாலையில் இருந்து சீனியும் | பதுளை | 59 | 2 | 0 | 22 | 1 | 0 | 7.8.64 காலை 10 மணி |
| 2. நுவரெலியா பாடசாலை வைத்திய அதிகாரியின் அலுவலத்திற்கும் அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும், நானுஓயா புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும், நுவரெலியா அண்ட்வல்ப்பனை ஐக்கிய பண்டகசாலையிலிருந்து சீனியும் | நுவரெலியா | 37 | 2 | 0 | 13 | 2 | 0 | 7.8.64 காலை 10 மணி |
| 3. மத்துறட்டை பொறுப்புள்ள அதிகாரியின் அலுவலகத்திற்கும் அவ்வதிகாரியின் பகுதிகளிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் கண்டிப் புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும் உடகெவகெற்ற ஐக்கிய பண்டகசாலை கங்குறங்கேத்தையிலிருந்து சீனியும் | மத்துறட்டை | 22 | 2 | 0 | 8 | 2 | 0 | 7.8.64 காலை 10 மணி |
| 4. கொஸ்லந்தை பொறுப்புள்ள அதிகாரியின் அலுவலகத்திற்கும், அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் அப்புத்தளைப் புகையிரத நிலையத்திலிருந்து பால்மாவும், மகாப்பலாத்தை ஐக்கிய பண்டகசாலையிலிருந்து (பண்டாரவளை) சீனியும் | கொஸ்லந்தை | 35 | 2 | 0 | 13 | 0 | 0 | 7.8.64 காலை 10 மணி |
| 5. பிபிலை பொறுப்புள்ள அதிகாரியின் அலவலகத்திற்கும், அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும், பதுளைப் புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும், பகல ஊவா ஐக்கிய பண்டகசாலை பிபிலையிலிருந்து சீனியும் | பிபிலை | 60 | 0 | 0 | 23 | 0 | 0 | 7.8.64 காலை 10 மணி |

7-486—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

## சுகாதார திணைக்களம்—பதுளைப் பிரிவு

### பண்டக விநியோகத்திற்குரிய கேள்விப் பத்திரம்

1964 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ம் திகதி முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் புகையிரத நிலையங்களிலிருந்து வைத்திய நிலையங்களுக்குப் பண்டக விநியோகத்திற்குரிய வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை இலங்கையர்—இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு முன்பாக பதுளைப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக் கொள்வார்.

2. கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்குக் கேள்விகள் மூடப்பட்டு அவைகள் உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாய் இருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது என் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள் எனது அலுவலகத்தில் அல்லது அநுராதபுரம், மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகலை, மாத்தறை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 3 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ நேரத்துக்கு கொடுக்கத் தவறினால் கேள்விப் பத்திரம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், பதுளை என்ற முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் கேள்விப் பத்திர விபரமும், கீழே அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்விக்காரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைக் குறிப்பாகக் கவனித்தல் வேண்டும்.

(i) ½ மைலும் அதற்குக் கூடிய தூரமும் ஒரு மைலாகக் கணிக்கப்பட்டு அதற்குரிய கூலி கொடுக்கப்படும். ½ மைலுக்குக் குறைந்த தூரத்துக்கு உண்மையாகக் கடந்த தூரத்திற்கே கூலி கொடுக்கப்படும்.

(ii) ஒரு தொன்னுக்குக் கூடிய பாரமுள்ள சாமான் ஏற்றி இறக்கினால் மாவட்ட காரியாதிகாரி சிபார்சு செய்யும் தொகையின் படியே அதற்குரிய கூலி வழங்கப்படும்.

(iii) வருங்காலத்தில் திறக்கப்படும் நிலையங்களுக்குப் பண்டக விநியோகத்திற்கு தொகுதிக் காரியாதிகாரியின் வீதப்படி கொடுக்கப்படும்.

**கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுப்படி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச் சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

கேள்வியின் நிபந்தனைகள் கேள்விக்குரிய பத்திரத்தின் பின்புறத்தில் இருக்கின்றன. ஒரு கேள்வியைச் சமர்ப்பிக்கும்பொழுது இந்நிபந்தனைகளைக் கவனித்து செயலாற்றவேண்டும். கிடைக்கப்பெற்ற கேள்விகளில் ஒன்றையோ அன்றேல் முழுவதையுமோ காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை இத்திணைக்களம் கொண்டுள்ளது.

**பிணை வைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் தேவையான பிணைப்பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

மு. கனகரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
பதுளை.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
பதுளை,
1964 ம் ஆண்டு ஆடி மீ 3 ந உ.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

| 1<br>சேவை | 2<br>கேள்விக் கட்டுப்பணம் ரூபா | 3<br>பிணை வைப்புப்பணம் ரூபா | 4<br>கேள்வி மூடும் திகதி |
|---|---|---|---|
| கீழ்க்காணும் புகையிரத நிலையங்கள், வெளிமுக நிலையங்களிலிருந்து மருத்துவ நிலையங்களுக்கும் சம்பந்தப்பட்ட வைத்திய நிலையங்களிலிருந்து புகையிரத, வெளிமுக நிலையங்களுக்கும் இருநோக்குப் பண்டக விநியோகம் :— | | | |
| கூட்டு : 1 | | | |
| எல்லை<br>ஹாலிஎல்லை<br>வதுளை | 100 | 400 | 5.8.64<br>காலை 10 மணி |
| கூட்டு : 2 | | | |
| கண்டி<br>உலப்பனை<br>நாவலப்பிட்டி<br>கொட்டகலை<br>தலவாக்கலை<br>வட்டகொடை | 100 | 200 | 5.8.64<br>காலை 10 மணி |
| கூட்டு : 3 | | | |
| நானுஓயா<br>நுவரேலியா<br>ருகலை<br>கெப்பற்றிப்பொலை | 100 | 200 | 5.8.64<br>காலை 10 மணி |
| கூட்டு : 4 | | | |
| ஓகியா<br>ஹப்புத்தளை<br>வெள்ளவாயா<br>மொனருகலை<br>பண்டாரவளை<br>வெலிமடை | 100 | 300 | 5.8.64<br>காலை 10 மணி |
| கூட்டு : 5 | | | |
| எருவூர் | 100 | 100 | 5.8.64<br>காலை 10 மணி |

7–429—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல.

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும் பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1964 ம் ஆண்டு அக்டோபர் 1 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து, சுகாதார அலுவலகங்களிலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து, யாழ்ப்பாணப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள், அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத்தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன், சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம், என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது, இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்டகாலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய விபரங்கள் அனைத்தையும் யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. என். ஆர். நதானியல்ஸ்,
சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 2 ம் திகதி.

### மேல் கூறப்பட்ட அட்டவணை

| சேவை | பகுதி | மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | கேள்விகள் மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| (1) சுகாதார பொறுப்பு அதிகாரி, கோப்பாய் காரியாலயத்தில் இருந்து பால் ஊட்டும் நிலையங்கள், கோப்பாய் பகுதி | கோப்பாய், .. | 10,385 | 6.8.64 முற்பகல் 10.00 மணி |
| (2) சுகாதார பொறுப்பு அதிகாரி, சாவகச்சேரியிலிருந்து பால்ஊட்டும் நிலையங்கள், சாவகச்சேரி பகுதி | சாவகச்சேரி .. | 8,955 | |
| (3) சுகாதார பொறுப்பு அதிகாரி, பருத்தித்துறை காரியாலயத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கள், பருத்தித்துறை | பருத்தித்துறை .. | 10,106 | |
| (4) சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பளை காரியாலயத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கள், தெல்லிப்பளைப் பகுதி | தெல்லிப்பளை .. | 9,393 | |

1 -372/1—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பால் மாவும் சீனியும் விநியோகித்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1964 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி முடிய உள்ள காலம் வரைக்கும், கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளின், பொறுப்புள்ள அதிகாரிகளின் காரியாலயங்கள், களஞ்சியத் திடுகைகளின் ஊடாக புகையிரத நிலையங்களிலிருந்து பால் மாவும், ஐக்கிய பண்டகசாலை களிலிருந்து சீனியும் பால் ஊட்டப்படும் நிலையங்கட்கு, விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து யாழ்ப்பாணப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. **(அ) கேள்விக் கட்டுப்பணம்.**—ரூ. 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**(ஆ) கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப் பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாக்கல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடை யும் காலத்திற்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரக்காரர்கள், கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் பத்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேச தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன், சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் சேவையின் தன்மையும், கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டிக்குள் போடலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விச்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் யாழ்ப்பாண சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1964 ம் ஆண்டு ஜூலை மீ. 2 ந் உ.

ஜீ. என். ஆர். நதானியல்ஸ்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

### மேல் கூறப்பட்டுள்ள அட்டவணை

| | சேவை | பிரிவு | உத்தேசத்தொகை பால்மா அந்தர் | உத்தேசத்தொகை சீனி அந்தர் | மூடப்படும் கேள்வித் திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும், தீவு பலநோக்க கூட்டுறவு சங்கம், ஊர்காவற்றுறையிலிருந்து சீனியும் ஊர்காவற்றுறை பொறுப்புள்ள அதிகாரியின் காரியாலயத்திற்கும் அங்கிருந்து பால் ஊட்டும் நிலையங்களுக்கும் | ஊர்காவற்றுறை | 50 | 19 | 6.8.64 மு. ப. 10 மணி |
| 2. | சாவகச்சேரி புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும், ஐக்கிய பண்டகசாலை சாவகச்சேரியிலிருந்து சீனியும் சாவகச்சேரி பொறுப்புள்ள அதிகாரியின் காரியாலயத்திற்கும் அங்கிருந்து பால் ஊட்டும் நிலையங்களுக்கும் | சாவகச்சேரி | 60 | 23 | |
| 3. | கிளிநொச்சி புகையிரத நிலையத்திலிருந்து பால் மாவும் தெற்கு யாழ்ப்பாணம் ஐக்கிய பண்டகசாலை கிளிநொச்சியிலிருந்து சீனியும், கிளிநொச்சி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கும் அங்கிருந்து பால் ஊட்டும் நிலையங்களுக்கும் | கிளிநொச்சி | 16 | 6 | |

7-372/2—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

### கேள்விப்பத்திர முடிவுகள்

| வேலையின் விபரம் | கிடைத்துள்ள கேள்விப் பத்திரங்களின் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பக்காரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப் பட்ட தொகை |
|---|---|---|---|
| யாழ்ப்பாண உப பிரிவின்கீழ் உள்ள இரணமடு வலதுகரை பாலத்திற்கு அருகாமையில் நீரிடைப் பாதை அமைத்தல் | 3 .. | பரந்தன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. | ரூபா. 73,511 |

ஆர். எஸ். தர்மானந்தர்,
பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வட பகுதி.

வவுனியா, 26.6.64.

7-310—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

# நானாவிதம்

## கமத்தொழிற் சேவை இலாகா

### அரசாங்க நெல்லைக் கூலிக்குக் குற்றுவதற்காக நெல்குற்றும் ஆலைகளைப் பதிவு செய்தல்

கண்டி, மொனறாகலை மாவட்டங்களைச் சேர்ந்ததும், பள்ளவத்தை, விபிலை மொனறாகலை வெள்ளவாயா ஆகிய இடங்களில் உள்ள உத்தரவாத விலைத்திட்ட நெற்களஞ்சியங்களில் இருந்து 10 மைல் விட்டார்த்தத்திற் குள் அடங்கிய அரிசி ஆலைகளின் குற்றுமளவையை மட்டுப்படுத்திக் கூட்டு வதென தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. கீழ்க்காணப்படுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன :—

(அ) மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் நெல் ஆலைகளை நிறுவ விரும்பும், பதிவு செய்யப்பட்டியங்கும் ஐக்கிய சங்கங்களுக்கும், சமாசங் களுக்கும் அவசியமானபொழுது இவ்விலாக்காவினால் கடனுதவிகள் அளிக்கப்படும்.

(ஆ) மேற்கூறப்பட்ட நான்கு உத்தரவாத விலைத்திட்ட நெற்களஞ்சி யங்களில் எதில் ஒன்றிலேனும் இணைந்த பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட ஆலையாளர்கள், தங்கள் ஆலைகளுக்கு மேலதிகமான இயந்திரங்களை இணைக்க விரும்பினால் வாரத்துக்கு 2,000 புசல் நெல் குற்றக்கூடிய அளவுக்கு கோட்டாவை அதிகப்படுத்தலாம்.

(இ) மேலதிகமான அரிசி ஆலைகள் உள்ள ஏனைய மாவட்டங்களி லிருந்து, மேற்கூறப்பட்ட நான்கு உத்தரவாத விலைத்திட்டக் களஞ்சியங் களிலிருந்து 10 மைல் விட்டார்த்தத்துக்குள் தமது ஆலைகளை மாற்றிக் கொள்ள விரும்புவோர் தற்பொழுது பதிவு செய்யப்பட்டிருக்கும் நெல் ஆலையாளர்.

(ஈ) இம்மாவட்டங்களில் மேலே கூறப்பட்ட எந்த ஒரு உத்தரவாத விலைத்திட்ட நெற்களஞ்சியத்திலிருந்தும் 10 மைல் விட்டார்த்தத்திற்குள் புதிய ஆலைகளை அமைத்து கோட்டாக்களைப் பெறவிரும்புவோர்.

(2) பின்வரும் நிபந்தனைக்குட்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் :—

(i) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் தாம் அரிசி ஆலை நிறுவுவதற் கும், யந்திரம் பூட்டுவதற்கும் உண்மையாகவே கருதுபவரெனவும் நிறு வும் தத்துவம் உடையவரெனவும் அத்தாட்சி பண்ணக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டு ஆறு மாதங்கள் முடிவதற் குள் அரிசி ஆலை நிறுவி வேலை செய்ய வேண்டும். இந்நிபந்தனையின்படி ஆலை நிறுவாதவர்கள் இந்த இலாக்காவிடமிருந்து கோட்டா பெறும் உரிமையை இழந்து விடுவார்கள்.

(iii) மேற்பந்தியிற் கூறிய விண்ணப்பங்கள் பதிவுக்குத் தெரிவு செய்யும்போது (அ), (ஆ), (இ), (ஈ) எனக்காட்டிய வரிசையின்படி மாத்திரமே மேற்கொள்ளப்படும். (அ) உப பந்தியில் உள்ள விண்ணப் பங்களின்படி வேண்டிய நெல் குற்றும் அளவை உண்டானால் ஏனைய (ஆ), (இ), (ஈ) உப பந்தியில் உள்ளவை பதிவு செய்யப்படமாட்டா. அதேபோல (அ), (ஆ) என இரண்டிலும் வேண்டிய அளவை உண்டானால் மற்றைய இரண்டு (இ), (ஈ) உப பந்தியில் உள்ளவை பதிவு செய்யப்படமாட்டா.

(iv) அரிசி ஆலைக்காக தேர்ந்தெடுக்கப்படும் இடம் பிரதான வீதியி லிருந்து 100 யாருக்குட்பட்டதாயிருக்க வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் விலாசத்திற்கு 31.7.64 க்கு முன்பாக அல்லது அன்று கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும் :—

கமத்தொழிற் சேவை இலாகா,
தபாற் பெட்டி 537,
கொழும்பு 7.

ஜே. வி. பொன்சேகா,
கமத்தொழிற் சேவை அதிபர்.

கமத்தொழிற் சேவை இலாகா,
தபாற் பெட்டி 537,
கொழும்பு 7.

7-416—10.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,102

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடை யிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

**அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.